**பதுளை மாநகர சபை - 2023**

--------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதுளை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பதுளை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 3,531,996 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி பெறுவனவுகள் முதிர்ச்சியடையும் திகதியின் பிரகாரம் வருமான செலவினக் கணக்கில் சீராக்குவதற்க நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் உடைத்து அகற்றப்பட்ட விளையாட்டு சமூக வெற்றிடத்தில் பெறுமதி ரூபா 6,800,000 கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் கணக்குகள் தயாரிக்கும் போது நடைமுறையல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது வேலை பூர்த்திசெய்யப்படாத மற்றும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 09 வேலைகளுக்குரிய ரூபா 27,093,067 நிதி நிலைமைக் கூற்றில் கடன் கொடுத்தோரில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீரற்ற காலநிலையின் காரணமாக வேலைகள் பூர்த்தி செய்வதற்கு வசதியீனமாக இருந்ததுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கால நீடிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஈ) செலுத்த வேண்டிய தரப்பினர் இனங்காணப்படாத வருமான உதவி ரூபா 33,448,817 நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் வருமான செலவினக் கணக்கில் சீராக்குவதற்கும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை 2024 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) கடந்த நிலுவை முத்திரைக் கட்டணம் குறைத்துக் காண்பிக்கப்பட்ட தவறை சரிசெய்யும் போது ரூபா 983,006 அதிகரித்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) முன்னைய ஆண்டுகளுக்குரிய புகையிரத நிலையத்திற்கு செலுத்தப்பட்ட நிலுவை வரித் தொகையான ரூபா 9,872,386 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை செலுத்துதல் திரண்ட நிதியத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை மின்சார பட்டியலின் பெறுமதியான ரூபா 4,261,603 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,892,710 மதிப்பிழந்த காசோலை உறுதிப்படுத்தப்படாமல் நடைமுறைச் சொத்தின்கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமதிக்குரிய தகவல்களை தீர்த்துவைத்து கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிழந்த காசோலை மீதிகளை விரைவாக நிதிக்கூற்றுக்களில் தீர்த்துவைத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 180 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது 02 பொது மலசல கூடங்கள் ரூபா 9,723,000 கேள்விக்கு கேள்வித் தொகையும் ஊழியர் இருவரின் மனையினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | அந்த கேள்வி கையளித்தல் தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் ஆரம்ப விசாரணைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,680,800 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,985,192 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மாநகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 24,260,000 | 17,334,936 | 17,152,036 | 182,900 | 24,960,000 | 13,732,830 | 7,595,197 | 6,137,633 |
| (ii) | வாடகை | 53,370,600 | 65,078,357 | 59,850,473 | 5,227,884 | 54,318,701 | 54,439,651 | 47,963,609 | 6,476,042 |
| (iii) | அனுமதிப்பத்த ிரக் கட்டணம் | 20,395,000 | 20,333,356 | 19,403,331 | 930,025 | 19,122,500 | 18,736,414 | 17,376,264 | 1,360,150 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,500,000 | 10,094,160 | 10,094,160 | 0 | 18,348,000 | 15,755,208 | 12,235,655 | 3,519,553 |
| | மொத்தம் | 104,525,600 | 112,840,809 | 106,500,000 | 6,340,809 | 116,749,201 | 102,664,103 | 85,170,725 | 17,493,378 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவைக் காலப் பகுதியின் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத நிலுவை ஆதனவரி ரூபா 17,436,125 நிலுவை கடை வாடகை ரூபா 2,745,130 மற்றும் நிலுவைக் கேள்வி மீன் கடை வாடகை ரூபா 68,020 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரியான ரூபா 18,283,037.91 தொகையில் ரூபா 846,912.64 தொகை, நிலுவை கடை வாடகை மீதியான ரூபா 3,392,240 தொகையில் ரூபா 647,110 தொகையும் மற்றும் நிலுவை மீன்கடை வாடகை மீதியான ரூபா 171,563 தொகையில் ரூபா 103,543 தொகையும் 2024.03.31 ஆந் திகதியில் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 51,433,762 முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிலுவை முத்திரை வருமானத்தில் ரூபா 9,594,100 தொகை 2024.03.31 ஆந் திகதியில் கிடைத்துள்ளது. | நிலுவை முத்திரைக் கட்டணம் விரைவாக பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மாநகர சபைக்குரிய பதுளை மத்திய பேரூந்து நிலையத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை பேரூந்துகள் நுழைவதற்கு 2014 திசெம்பர் 05 ஆம் திகதி முதல் 2019 திசெம்பர் 04 வரையான 05 வருட காலப்பகுதிக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 2,177,500 வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைக்கு அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 226(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வளர் தலைமை அதிபதியால் 1994, 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த 03 மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 3,235,000 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. | நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 சனவரி 25 ஆம் திகதி முதல் 2011 ஒக்டோபர் 05 வரையான காலப்பகுதிக்குரிய தனியார் மின்சார நுகர்விலிருந்து இனங்காண முடியாத ரூபா 541,496 சபை நிதியத்திலிருந்து செலுத்தப் பட்டிருந்தது. | மின்சாரப் பட்டியல் நிலுவைப் பணம் 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் முதல் சபை தொழிலாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செல்லுபடிக் காலத்தை விஞ்சிய 479 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்காக காலத்தை நீடித்தல் அல்லது நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்கள் முடிவடைந்த பின்னர் இணக்கச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவதற்கு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி அனுமதிப்பத்தின் நிபந்தனை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பதுளை மாநகர சபையினால் பயன்படுத்தப்பட்ட ஏனைய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 02 நோயாளர் காவும் வண்டிகள், 02 கெப் வண்டிகள், தண்ணீர் பௌசர், மீட்டல் வாகனம் வண்டி, கெப் வண்டி, கம்பெக்டர் வண்டி, டிப்பர் லொறி வண்டி மற்றும் 02 டெக்டர் வண்டிகள் இன் உரித்து மாநகர சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் மாநகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாகனங்களின் உரித்தை தீர்த்து வைத்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) மாநகர சபைக்குரிய 02 மோட்டார் சைக்கிள்கள் பௌதீக ரீதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 02 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக கண்டறிந்து கணக்காய்வுப் பிரிவிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங் கண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும். |